தமிழ்நாடு அரசு
ஏர்வாடி சிறப்புநிலை பேரூராட்சி
திருநெல்வேலி மாவட்டம்

ந.க.எண்: 53/2022 நாள்: 12.07.2022

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

## பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்டம் 2022-2023

ஏர்வாடி சிறப்புநிலை பேரூராட்சியில் 2022-2023ம் ஆண்டின் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்டத்தில் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட பணிகள் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தபுள்ளிகள் இப்பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 27.07.2022 ஆம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 27.07.2022 ஆம் தேதி புதன்கிழமை மாலை 3.30மணிக்கு வருகை புரிந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி நமுனாக்கள் 26.07.2022 ஆம் தேதி செவ்வாய்கிழமை மாலை 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் உரிய தொகை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். http://tenders.tn.gov.in/ இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி நமூனா நகல் எடுத்தும் உரிய கட்டணத்தை பேரூராட்சியில் செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொள்ளலாம்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சம்) | 1% டேவணித் தொகை ரூ. | ஒப்பந்த நமுனா ( விற்பனைவரி மற்றும் சர்சார்ஜ் உட்பட) ரூ |
|---|---|---|---|---|
| 1. | ஏர்வாடி பேரூராட்சி அலுவலகத்தின் முகப்பில் ஆர்ச் அமைத்தல் | 4.50 | 4500 | 850 |
| 2. | ஏர்வாடி பேரூராட்சி திருமண மண்டபத்தின் முகப்பில் ஆர்ச் அமைத்தல் | 4.50 | 4500 | 850 |
| 3. | ஏர்வாடி – சிறுமளஞ்சி சாலையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் (களத்துப்பள்ளி) புதிய அங்கன்வாடி கட்டிடம் அமைத்தல் | 8.00 | 8000 | 1700 |

### நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிட்டு இன்ன வேலைக்கான ஒப்பந்தம் என்பதினை தெளிவாக எழுதி செயல் அலுவலர், ஏர்வாடி சிறப்புநிலை பேரூராட்சி என விலாசமிட்டு குறிப்பிட்ட நேரத்திற்குள் கொடுத்திட வேண்டும்.

2. அ) ஒப்பந்தப்புள்ளியுடன் அவ்வேலைக்கான டேவணித் தொகையை ஏர்வாடி சிறப்புநிலை பேரூராட்சியில் செலுத்திய ரசீதை இணைத்துக் கொடுக்க வேண்டும். டேவணித் தொகை செலுத்தப்படாத டெண்டர் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3. அ) பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களுக்கு டெண்டர் ஷெட்யூல் நமுனாக்கள் வழங்கப்படும்.
ஆ) ஒப்பந்ததாரர்கள் சரக்கு மற்றும் சேவை வரி, விற்பனை வரி பதிவு எண் பெற்றவராகவும், வருமான வரி பதிவு எண் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.
இ) வேலை முடிவுற்று அளவு, மேலளவு முடிவுற்று வேலைப் பட்டியல் அளிக்கப்பட்ட பின்னர், இவ்வேலை தொடர்பான புகாரின் பேரில், மறு அளவு மேற்கொள்ள உத்திரவிடப்படும் நிலையில், மறு அளவுப்படியான வேலைத் தொகையை பெற்றுக் கொள்ளளவேன் என எழுத்து மூலம் உறுதி மொழி அளிக்கக் கூடியவர்களுக்கு மட்டுமே டெண்டர் ஷெட்யூல் நமுனா வழங்கப்படும்.

4. அ)டெண்டர் மனுக்களில் திருத்தங்கள் இருப்பின், அவை டெண்டர் கொடுப்பவரால் கையொப்பமிட்டு ஒப்புதல் செய்யப்பட வேண்டும்.
ஆ) வரப் பெற்ற டெண்டர் மனுக்கள் செயல் அலுவலரால் குறிப்பிட்டுள்ள நேரத்தில் அல்லது அதற்கு பின் பிரித்து அப்போது ஆஜராகி உள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
இ) டெண்டர் பிரித்து பரிசீலிக்கும் போது ஏற்படும் பிரச்சனைகளுக்கு செயல் அலுவலரின் தீர்ப்பே முடிவானதாகும்.
ஈ) ஒப்பந்த தேதியினை ஒத்தி வைக்கவோ, மாற்றி அமைக்கவோ சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப நிபந்தினைகளை ஏற்படுத்தவோ, மாற்றி அமைக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

5. அ) டெண்டரை ஒப்புக் கொள்ளவோ, நிராகரிக்கவோ இப்பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

ஆ) எந்த ஒரு டெண்டரும் மதிப்பீட்டிற்கு 5%க்கு மேல் குறைவுபடுமானால் பணியின் தரம் மாறுபடலாம் என்பதற்காகவும், யாதொரு டெண்டர் மதிப்பீட்டிற்கு அதிகமானால், அதிகமாகும் செலவினை பேரூராட்சியினால் ஈடு செய்ய இயலாது என்பதற்காகவும், அத்தகைய டெண்டரை பரிசீலிக்காமல் தள்ளுபடி செய்ய மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

ஆ) எந்த டெண்டர் அங்கீகரிக்கப்படுகிறதோ, அதனை கொடுத்தவர் அந்த வேலையை செய்து முடிக்க உத்திரவு பெற்ற ஏழு தினங்களுக்குள் ரூ. 20/-க்கான முத்திரைத்தாளில் இவ்வேலைக்கு ஒப்பந்தப் பத்திரம் ஒன்று நிர்வாக அலுவலருக்கு எழுதிக் கொடுத்திட வேண்டும்.

6. அ) ஒப்பந்ததாரர் செலுத்தியிருக்கும் டேவணித் தொகை, அவ்வேலை சரிவர செய்யப்பட்டு, அதன் தணிக்கை முடித்த பிறகு திரும்ப கொடுக்கப்படுவதாகும். தணிக்கையில் ஏதாவது பிடித்தம் இருப்பின், அதை பிடித்துக் கொண்டு, மீதித் தொகையை மட்டும் திரும்ப கொடுப்பதற்கு உட்படும்.

   ஆ) டேவணித் தொகைக்கோ யாதொரு சூழ்நிலை முன்னிட்டு நிலுவைப்படும் வேலைத் தொகைக்கோ வட்டி வழங்கப்பட மாட்டாது.

   இ) வேலைத் தொகை வழங்கப்படும் தேதியிலிருந்து ஒரு ஆண்டு சரிவர செய்யப்பட்டு, அதன் தணிக்கை முடிந்து, தணிக்கை அறிக்கை வரப்பெற்ற பின்னர் தணிக்கை தடை ஏதுமில்லை என்றால் டேவணி திரும்ப கொடுக்க தகுதிபெறும்.

7. அ) வேலைத் தொகையில் அமலில் உள்ள விகிதப்படி, வைப்புத்தொகை 5%, வருமான வரி 1%, கட்டிட தொழிலாளர் நலநிதி 1% , GST 12% மதிப்பீட்டு தொகையில் பிடித்தம் செய்யப்படும்.

8. அ) வேலையை செய்து முடிக்க மறு ஒப்பந்தப்புள்ளி முன்வராத நிலையில் ஒப்பந்ததாரர் பொறுப்பில், செலவில் ரத்து செய்து அதனை இலாகா மூலமோ அல்லது மறு ஒப்பந்தப்புள்ளி கோரியோ முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9. வேலையின் மதிப்பீடுகளில், தொழில்நுட்ப பணியாளர் சம்பளம், எதிர்பார சில்லரை செலவுகள் சேர்க்கப்பட்டுள்ளதால், வேலைகளின் அளவுகள் படியான வேலைத் தொகை, மதிப்பீடு தொகைக்கு இயல்பாக குறைபடும்.

10. வேலை ஆரம்பிப்பதற்கு முன்பும், வேலை நடைபெறும் போதும், வேலை முடிந்த பின்னரும் என்ற மூன்று நிலைகளில் புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு (CD) (Maxi Size மற்றும் A4 Size) போட்டோ எடுத்து அளிக்க வேண்டும். புகைப்படங்கள் ஒப்பந்தாரர் சொந்த பொறுப்பில் எடுத்துக் கொடுக்க வேண்டும்.

11. ஒப்பந்தப்புள்ளி தொடர்பான நிபந்தனைகள் வேலை நாட்களில் பேரூராட்சி அலுவலகத்தில் வழங்கப்படும்.

12. ஒப்பந்தபுள்ளிகள் பெறப்படும் நாளில் அரசு விடுமுறை மற்றும் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டால் மறு வேலை நாளில் பெற்றுக் கொள்ளப்படும்.

13. பணிகள் செய்யும் போது அரசு அறிவிக்கும் நிபந்தனைகளின்படியும், செயல் அலுவலர் மற்றும் பொறியாளர்களின் ஆலோசனையின்படியும் திருப்திகரமாக செய்து முடிக்க வேண்டும்.

14. ஏர்வாடி பேரூராட்சியில் ஏற்கனவே எடுக்கப்பட்ட பணிகள் முடிக்கப்படாமல் நிலுவையிலுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு இந்த ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்பட மாட்டாது.

12/7/22

செயல் அலுவலர்,
சிறப்புநிலை பேரூராட்சி
ஏர்வாடி – 627103.

12.7.22

பெறுநர் :

அனைத்து பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்கள், ஏர்வாடி சிறப்புநிலை பேரூராட்சி

நகல் :

1. செயல் அலுவலர் அவர்கள், திருக்குறுங்குடி / மூலைக்கரைப்பட்டி / நாங்குநேரி / வடக்கு வள்ளியூர் பேரூராட்சி தகவல் பலகையில் ஒட்டி விளம்பரம் செய்யும் வகைக்கு.
2. இளநிலை பொறியாளர், ஏர்வாடி பேரூராட்சி தொகுப்பு
3. அலுவலக விளம்பரப் பலகை.

நகல் பணிவு :

1. உதவி இயக்குநர் அவர்கள், பேரூராட்சிகள், திருநெல்வேலி மண்டலம் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.
2. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், திருநெல்வேலி மாவட்டம் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.